**செய்தி வெளியீடு எண்:519** **நாள்:03.07.2008**

## இந்து சமய அறநிலையத்துறை—சென்னை

<u>செய்திக் குறிப்பு</u>

சென்னை—05 திருவல்லிக்கேணி, டாக்டர் நடேசன் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான திருவல்லிக்கேணி, புல எண்.826/1ல் 11807 சதுர அடி பரப்பளவுள்ள மனையில் சுமார் 50 ஆண்டுகாலமாக 81 நபர்கள் கூட்டாக ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பாளர்கள் திருக்கோயில்களுக்கு எந்தவிதமான வாடகையினையும் செலுத்தாததாலும், இவர்களை வெளியேற்ற முடியாததாலும் திருக்கோயிலுக்கு கணிசமான வருவாய் இழப்பு ஏற்பட்டு வந்தது. இவர்களில் பெரும்பாலோனர் நிதி வசதி குறைந்த பிரிவினர் ஆவர்.

மேற்கண்டவாறு திருக்கோயில் நிலங்களில் நீண்டகாலமாக குடியிருந்து வரும் கூட்டு ஆக்கிரமிப்பாளர்களை வாடகைதாரர்களாக வரன்முறைப்படுத்துவது தொடர்பாக தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவுரையின்படி மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.கே ஆர்.பெரியகருப்பன் அவர்கள் 4.5.2007அன்று சட்டமன்றத்தில் இது போன்ற கூட்டு ஆக்கிரமிப்பாளர்கள் திருக்கோயில் நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்படும் நியாய வாடகையினை திருக்கோயிலுக்கு செலுத்தும் பட்சத்தில் அவர்களை வாடகைதாரர்களாக ஏற்று அங்கீகரிக்கலாம் என அறிவித்தார். அதன்படி அரசாணை எண்.340 (நிலை) தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை நாள் 6.8.2007 வெளியிடப்பட்டது. இவ்வரசாணையின்படி மேற்கண்ட அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான மனைப்பகுதியில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 81 நபர்கள் திருக்கோயிலுக்கு நியாய வாடகை செலுத்த ஒப்புக்கொண்டனர். இதன் அடிப்படையில் இவர்களை வாடகைதாரர்களாக அங்கீகரித்து இந்து சமய அறநிலையத்துறை 30.6.2008 அன்று உத்தரவிட்டது. இதனால் திருக்கோயிலுக்கு வருடத்திற்கு ரூ.78,456/— வாடகையாக கிடைக்கும்; மேலும் முந்தைய வாடகை நிலுவைத்தொகை ரூ.7,84,000/—ம் திருக்கோயிலுக்கு கிடைக்கப்பெறும்.

மேற்கண்டவாறு வாடகைதாரர்களாக அங்கீகரிக்கப்படுபவர்களுக்கு உரிய உத்தரவினை இன்று காலை இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே ஆர்.பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆயிரம்விளக்கு உசேன், திரு.ஜி.முருகையன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**